<u>தேதி:-08-04-2022 அசல்வழக்குஎண்.17/2016 வா.சா.1</u>

<u>(சர்தார்பாட்ஷா)</u>

<u>முதல்விசாரணை:-</u>

இத்துடன் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனது மகளுக்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் நடந்த திருமணத்திற்கான ஜமாத்தில் இருந்து கொடுத்த நிக்காஹ் பதிவேட்டு நகல் **வா.சா.ஆ.1**. எனது மகள் ப்ரவீன்பாபு பெயரில் தாவாச் சொத்தை மூன்று இலக்கங்களாக கிரையம் வாங்கியதற்கான கிரையப்பத்திரங்கள் சான்றிட்ட நகல்கள் **வா.சா.ஆ.2 முதல் 4**. என் மகளின் பெயரிலுள்ள வீட்டுவரி இரசீதுகள் **வா.சா.ஆ.5, 6**. என் மகளின் இறப்புச்சான்று நகல் **வா.சாஆ.7**. 2ஆம் பிரதவாதி என் மகள் பெயருக்கு வழங்கிய இரசீதுகள் **வா.சா.ஆ.8 முதல் 13**. 1ஆம் பிரதிவாதிக்கும், அவருடைய 2ஆம் மனைவிக்கும் திருமணம் நடந்ததற்கான திருமணஅழைப்பிதழ் **வா.சா.ஆ.14**. 1ஆம் பிரதிவாதி எனக்கும், என் குடும்பத்தினருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.15**. நானும், என் குடும்பத்தாரும் 1ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில்அறிவிப்பு அஞ்சல்ஒப்புகை அட்டையுடன் கூடியது **வா.சா.ஆ.16**. 2ஆம் பிரதிவாதிக்கு நான் கொடுத்த ஆட்சேபணை மனு அதை 2ஆம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கூடியது **வா.சா.ஆ.17**. தவணை தொகையை செலுத்தக்கோரி 2ஆம் பிரதிவாதி இறந்த என் மகள் பெயருக்கு அனுப்பிய கடிதம் **வா.சா.ஆ.18**. நீதிப்பேரணை மனு எண்.1881/2017ல் நான் தாக்கல் செய்த மனு நகல் **வா.சா.ஆ.19**. மின்வாரியத்தில் மின்இணைப்பை துண்டிக்கக்கோரி மின்வாரிய அதிகாரி எனக்கு கொடுத்த கடிதம் **வா.சா.ஆ.20**. 1ஆம் பிரதிவாதியின் 2வது மனையின் தகப்பனார் என் மீது பொய்யாக கொடுத்த முதல்தகவல்அறிக்கை நகல் **வா.சா.அ.21**. 1ஆம் பிரதிவாதி மதுரை மகபூப்பாளையம் ஜமாத்தில் நான் என் மகளின்

நகையையும், பணத்தையும் கேட்டு தொந்தரவு செய்ததாக கொடுத்த மனுவின் நகல் **வா.சா.ஆ.**22. (1 ஆம் பிரதிவாதி தரப்பில் ஜமாத்தில் தலைவர அல்லது செயலாளர் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றும், முத்திரை மட்டும் பதிக்கப்பட்டுள்ளது என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் வழக்கின் விசாரணையின் முடிவில் ஆவணத்தின் உண்மைத்தன்மையை முடிவு செய்யும் உரிமைக்கு உட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது).

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.